சுருக்கம்

பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி பாடங்கள் – பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் 2010-2011 முதல் மாற்றி அமைத்திட - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித்(விஇ)துறை

அரசாணை (நிலை) எண்.277,

நாள் 26.10.2009
திருவள்ளுவராண்டு 2040
விரோதி, ஐப்பசி – 09.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 8 மற்றும் 9, பள்ளிக் கல்வித் துறை, நாள் 06.01.2009.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.40994/பிடி2/09, நாள்.24.9.2009.

----

ஆணை:-

படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில், மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் மாற்றி அமைத்திட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்காணும் அரசாணைகளின் அடிப்படையில் தற்போது நடைமுறையிலுள்ள பல்வேறு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளை ஒருங்கிணைத்து ஒன்பது தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் அமைக்கப் பெற்று பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் எழுதிட முடிவு செய்யப்பட்டு, ஒன்பது பாடக் குழுக்கள் அமைத்து, புதியதாக ஒன்பது தொழிற்கல்வி பிரிவுகளுக்கு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், ஏற்கனவே நடைமுறையிலுள்ள தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் மாணவர்களின் குறைவான சேர்க்கை மற்றும் தொழிற்கல்வியில் தற்போதுள்ள வளர்ச்சி நிலையை கருத்தில் கொண்டு தொழிற்கல்வி பாடத்தின் பல்வேறு பிரிவுகள் பின்வருமாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| Name of New Group | | Groups Clubbed | |
|---|---|---|---|
| | | Group Name | Group code |
| 1 | General Machinist | Air Conditioning & Refrigeration | 778 |
| 2 | Electrical Machines & Appliances | Electrical Domestic Appliances | 773 |
| | | Electrical Motor Rewinding | 774 |
| 3 | Electronics Equipments | Radio & TV (with Maths) | 797 |
| | | Radio & TV (with Physics) | 749 |
| | | Domestic Electronics Projection Equipments (DEPE) | 748 |
| 4 | Draughtsman Civil | Building Maintenance | 747 |
| 5 | Textile & Dress Designing | Dress Designing & Making (with Chemistry) | 724 |

| | | | |
|---|---|---|---|
| | | Textiles & Designs | 731 |
| | | Textiles & Designs | 732 |
| 6 | Agricultural Practices | Crop Production | 703 |
| | | Dairying | 704 |
| | | Farm Mechanics and Post Harvesting Technology | 706 |
| | | Poultry | 707 |
| | | Plant Protection | 708 |
| | | Sericulture and Apiculture | 709 |
| | | Small Farm Management | 711 |
| | | Spices and Plantation Crops | 712 |
| | | Vegetables & Fruits | 713 |
| | | Agricultural Chemicals | |
| | | Fisheries | |
| 7 | Food Management and Child Care | Dietetics & Nutrition and Food Preparation | 726 |
| | | Food Preservation (with Biology) | 727 |
| | | Baking and Confectionary | 716 |
| | | Child Care | 720 |
| 8 | Nursing | Nursing with Physics | 761 |
| | | Nursing with Chemistry | 762 |
| 9 | Office Secretaryship | Office Secretaryship (with Shorthand) | 743 |
| | | Office Secretaryship (with Accountancy) | 744 |

3. மேலும் மேற்காணும் ஒன்பது பாடத்திட்டத்தின்படி பாடநூல்கள் தயாரித்து, 2010-2011 ஆம் ஆண்டு முதல் 11ம் வகுப்பிலும், 2011-2012 ஆம் ஆண்டு முதல் 12ம் வகுப்பிலும் நடைமுறைப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் மேற்காணும் ஒன்பது பாடப்பிரிவுகளை பின்வருமாறு பெயர்களில் நடைமுறைப்படுத்திட உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் வேண்டியுள்ளார்.

<u>ஒன்பது புதிய பாடப்பிரிவுகள் விவரம் (XI மற்றும் XII-ம் வகுப்பு)</u>

1. பொது இயந்திரவியல் (General Machinist)
2. மின் இயந்திரங்களும், சாதனங்களும் (Electrical Machines and Appliances)
3. மின்னணு சாதனங்கள் (Electronic Equipments)
4. துணிகளும் ஆடை வடிவமைத்தலும் (Textiles & Dress Designing)
5. வேளாண் செயல்முறைகள் (Agricultural Practices)
6. உணவு மேலாண்மையும் குழந்தை நலனும்

(Food Management and Child Care)

7. செவிலியத் துறை (Nursing)

8. கட்டடப் பட வரைவாளர் (Draughtsman Civil)

9. அலுவலக மேலாண்மை (Office Secretaryship)

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்தபின், மேற்கண்டவாறு பல்வேறு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளை ஒருங்கிணைத்து அமைக்கப் பெற்றுள்ள புதிய 9 பாடத்திட்டத்தின்படி புதிய பாடநூல்கள் தயாரித்து 2010-2011 முதல் 11ம் வகுப்பிலும், 2011-2012 முதல் 12ம் வகுப்பிலும் நடைமுறைப்படுத்திடவும் ஒன்பது பாடப்பிரிவுகளில் வேளாண் செயல்முறைகள் (Agricultural Practices) என்ற புதிய பாடப்பிரிவை மட்டும் தமிழ்வழி போதனை நடத்தவும், இதரப் பாடப்பிரிவுகளை தமிழ் மற்றும் ஆங்கில வழி போதனை நடத்தவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்

அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ப.க.இ, சென்னை-6.
அனைத்து துறைத் தலைவர்கள்,
சென்னை – 6.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.

<u>நகல்</u>
அனைத்துப் பிரிவுகள்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9.
துறை இணைய தளம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.